**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029406

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 3/AC/2017 Date: நாள் 14.12.2017

2. (i) Act சட்டம்: கு.வி.மு.ச. சட்டம் Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 12, 13(2) r/w 13(1)(d)
   (iii) Act சட்டம்: இந்திய தண்டனைச் சட்டம் Sections பிரிவுகள்: 109
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 16.12.2017 ம் தேதி மதியம்
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 14.30 முதல் 20.00 மணிவரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.12.2017 Time : நேரம் காலை 11.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 வது இணை சார்பதிவாளர் அலுவலகம், திருப்பூர் சுமார் 1/2 கிலோ மீட்டர் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ப.சுப்பிரமணியன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A அப்பநாயகன்
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு வயது 53 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு.A. அல்லாபகஷ், சார்பதிவாளர் 2 வது இணை சார்பதிவாளர் அலுவலகம், திருப்பூர்.
   2) திரு.D. தெய்வேந்திரன், (47) த/பெ. தேவன், No.23, MIG, TNHB, வெள்ளைப்பட்டி, திருப்பூர்
   3) திரு.ப.பார்த்திபன், (30), S/o. மாதேஸ்வரன், 5/168, கரியாம்பாளையம், அனுப்பர்பாளையம், திருப்பூர்
   4) திரு.ஏ. ராஜா (20) த/பெ.செல்வம், தெக்கலூர் பேட்டை, கோவில்வழி, திருப்பூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —
   5) திரு.ப. நடராஜன் (33) த/பெ. பொன்னுசாமி, கீழ்சிறுவிளைப்பட்டி, கோவில்பட்டி.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
திடீர் சோதனையில் தருமபுரி உதவி இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ. 1,79,460/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed [illegible] / Rank [illegible] to take up the Investigation / Refused Investigation / transferred to PS [illegible] on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. [signature] DSP 17/12/2017 | S. [signature] DSP 17/12/2017

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.12.2017 12.00 hrs

Name: பெயர் S. SUBRAMANIAN
Rank: நிலை DSP ..........No. எண் .........
VAC, Dharmapuri

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2017 பிரிவு 102 கு.வி.மு.ச, 12 மற்றும் 13(2)r/w 13(1)(d) ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் பிரிவு இ.த.ச 109 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

---

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் 16.12.2017 ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 14.30 மணிமுதல் 20.00 மணிவரையில் தருமபுரி 2–எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 17.12.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2017 பிரிவு 102 கு.வி.மு.ச, 12, 13(2) r/w 13(1)(d) ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் பிரிவு இ.த.ச 109–ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு.

16.12.2017 ம் தேதி அன்று தருமபுரி மாவட்டம், தருமபுரி 2–எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு பதிவுதாரர்களிடமிருந்து இடைதரகர்கள் வாங்கி வைத்திருந்த கையூட்டு பணம் மற்றும் சார்பதிவாளர் அன்று கள ஆய்வு செய்வதற்காக, சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்களுக்கு விடுமுறை நாளான சனிக்கிழமை 16.12.2017–ந்தேதி மதியம் அலுவலகத்தில் வைத்து இடைதரகர்கள் மூலம் பெருமளவு கையூட்டு பணம் கொடுக்கப்போவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் 16.12.2017–ம் தேதி 14.15 மணிக்கு நான், அரசு சாட்சிகள் திரு.K.சண்முகசுந்தரம், துணை வட்டாட்சியர் (தலைமையிடம்), வட்டாட்சியர் அலுவலகம், தருமபுரி, திரு.C.ராஜசேகரன், கண்காணிப்பாளர், வட்டார மருத்துவ அலுவலர் அலுவலகம், டி.துரிஞ்சிபட்டி, தருமபுரி மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு தருமபுரி, எண்–2 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 14.30 மணிக்கு சென்றேன். எண்–2 சார்பதிவாளர் அலுவலகத்திற்கு குழுவினருடன் உள்ளே நுழைந்தபோது மத்திய அறையில் மேற்கு பக்கம் கிழக்கு முகம் பார்த்தவாறு சார்பதிவாளர் இருக்கையில் திரு.அ.அல்லா பகஷ் அவர்கள்

அமா்ந்திருந்தார். அவரிடம் நான் திடீர் தணிக்கைக்காக வந்த விபரத்தையும், திடீர் தணிக்கை மேற்கொள்ளவந்த அலுவலர்கள் பற்றி விபரங்களையும் தெரிவித்து அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகம் சோதனையிடப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தில் மத்திய அறையில் தெற்கு சுவரை ஒட்டி வடக்கு முகம் பார்த்தவாறு இரண்டு பெண்கள் இருக்கையில் அமா்ந்திருந்தனா். அவா்களை விசாரிக்க ஒருவா் தனது பெயா் வெ.புனிதா, இளநிலை உதவியாளராக இந்த அலுவலகத்தில் பணிபுரிவதாக தெரிவித்தார். மற்றொருவரை விசாரிக்க அவா் தனது பெயா் வி.ராதா என்றும், இவ்வலுவத்தில் Camera Operator–ஆக பணிபுரிந்து வருவதாகவும், சார்பதிவாளா் அலுவலகத்திற்கு தெற்கு முகம் பார்த்தவாறு அமா்ந்திருந்த பெண்ணை விசாரிக்க தனது பெயா் அ.நிா்மலா என்றும், தான் இந்த அலுவலகத்தில் Data Entry Operator- ஆக பணிபுரிந்து வருவதாக கூறினார். மேலும் இந்த அலுவலகத்தில் சார்பதிவாளா் இருக்கை அருகில் மேற்கு பார்த்து நின்று கொண்டிருந்த நபரை பார்த்து கேட்டபோது அவா் தனது பெயா் வி.அழகேசன் என்றும், இந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக கூறினார். மேலும் அந்த அறையின் கிழக்கு பக்கத்தில் நான்கு நபா்கள் நின்று கொண்டிருந்தனா். அவா்களை பார்த்து கேட்ட போது அவா்களில் ஒருவா் தன் பெயா் டி.வெங்கடேசன் என்றும், தான் பத்திர எழுத்தராக இருந்து வருவதாகவும், மேலும் அருகிலிருந்த நபரை விசாரிக்க அவா் தனது பெயா் எஸ்.வேலு என்றும் தான் சின்னதுரை என்ற ஆவண எழுத்தரின் உதவியாளராக இருந்து வருதாகவும், அவருக்கு அருகிலிருந்த நபரை விசாரிக்க அவா் தனது பெயா் எம்.பார்த்தீபன் என்றும், அவரும் இவ்வலுகலத்தில் இடைதரகராக இருந்து வருவதாகவும், மேலும் அவருக்கு அருகிலிருந்த நபரை விசாரிக்க அவா் தனது பெயா் எம்.தம்பிதுரை என்றும், தான் ஆவண எழுத்தராகவும், இந்த அலுவலத்தில் இடைதரகராகவும் இருந்து வருவதாகவும் கூறினார். அனைத்து நபா்களையும் சார்பதிவாளா் அலுவலக மத்திய பகுதிக்கு வரவழைக்கப்பட்டனா். பிறகு நான் சார்பதிவாளா் திரு.அ.அல்லா பகஷ் அவா்களிடம் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டிய கையிருப்பு பணம் ஏதேனும் உள்ளதா என கேட்டேன். அதற்கு அவா் ஆம் என்று சொல்லி அவரது மேசை மீது இருந்த ஒரு பிளஸ்டிக் டப்பாவில் வைக்கப்பட்டிருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜா் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணி

பார்க்க அதில் மொத்தம் ரூ.12,737/– இருந்தது. அந்த தொகைக்குண்டான கணக்குகள் பற்றி கேட்க, 15.12.2017 ந்தேதி வெள்ளிக்கிழமையன்று "அ" பதிவேட்டின்படி பதிவு செய்யப்பட்ட 12 ஆவணங்களுக்குண்டான பதிவு கட்டணம் ரூ.730/–ம், "D" பதிவேட்டின் படி வில்லங்க சான்றிதழ் மற்றும் சான்றிட்ட நகல் கட்டணம் ரூ.12966/–ம், உட்பிரிவு கட்டணமாக ரூ.40/– ஆக மொத்தம் ரூ.13,736/– இருந்தது. ஆனால் அந்த பிளாஸ்டிக் டப்பாவில் கையிருப்பு ரூ.999/– குறைவாக இருந்தது. அதற்கு இணை–2 சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களிடம் நான் விளக்கம் கேட்க, தான் அவசரமாக மருத்துவமனைக்கு செல்லவேண்டியிருந்ததால், 15.12.2017ந்தேதி கணக்கை சரிபார்க்காமல் சென்றுவிட்டதாக தெரிவித்தார். இருப்பு குறைவு ரூ.999/– எவ்வாறு குறைந்தது என்று தனக்கு தெரியவில்லையென்று தெரிவித்தார். மேற்படி தலைப்புகளின் கீழ் வசூல் செய்யப்பட்ட தொகைக்குரிய இரசீதுகளை நான் மற்றும் அரசு சாட்சிகள் பார்வையிட்டதில் சரியாக இருந்தது. அரசு நிரந்தர முன் பணம் ரூ.100/– இருப்பதாக சொல்லி சார்பதிவாளர் அவர்கள் அதே பணப்பெட்டியிலிருந்து தனியாக எடுத்து ஆஜர் செய்தார். அது சரியாக இருந்தது. கையிருப்பு பணம் ரூ.12,737 மற்றும் நிரந்தர முன்பணம் ரூ.100/– ஆகியவற்றை அரசு கணக்கில் செலுத்துவதற்காக சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்பு அரசு சாட்சிகள் உதவியுடன் சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவரது இருக்கை முழுவதும் சோதனை செய்யப்பட்டது, அவரது இருக்கையையொட்டி அவரது டேபிளுக்கு கீழே வலது பக்கம் குப்பைகூடையை சோதனை செய்தபோது அதில் மடிப்புடன் கத்தையாக பணம் இருந்தது. அரசு சாட்சிகள் உதவியுடன் அதை எடுத்து எண்ணி பார்க்க ரூ.59,170/– இருந்தது. அந்த பணத்தை குறித்து சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களிடம் விசாரிக்க அதற்கு அவர் அந்த பணம் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்று சொன்னார். அந்த பணத்திற்கு உரிய விளக்கம் அளிக்காததாலும், சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையிலிருந்ததாலும் அந்த பணம் **ரூ.59,170/–ஐ** தொடர் விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு நான் சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னுடைய மணிபர்சிலிருந்து ரூ.13,650/– எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.10,000/– ஐ 15.12.2017ந்தேதி தனது வங்கி சேமிப்பு கணக்கிலிருந்து

ஏடிஎம் கார்டு மூலம் பணம் எடுத்துள்ளதாகவும், அதற்கு ஆதாரமாக அவருடைய கைப்பேசியில் பெறப்பட்ட குறுஞ்செய்தியை காட்டினார். மேலும் மீதம் உள்ள ரூ.3,650/– ஐ பற்றி விசாரிக்க தனது சொந்த செலவிற்காக ஏற்கனவே வைத்திருந்த பணம் என்று சொன்னார். அவருடைய விளக்கம் ஏற்கதக்க வகையிலிருந்ததால் ரூ.13,650/– அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. அந்த அலுவலகத்திலிருந்த திரு.டி.வெங்கடேசன் என்பவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபோது அவருடைய பேண்ட் பாக்கெட்டில் ரூ.4300/– வைத்திருந்தார். அதற்குண்டான விளக்கத்தை அவரிடம் நான் கேட்டபோது முன்னுக்குபின் முரணாக விளக்கம் அளித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாதாலும் அவர் ஏற்கனவே தான் பத்திர எழுத்தராக இருப்பதாக தெரிவித்தாலும், தொடர் விசாரணைக்காக அந்த பணம் **ரூ.4300/–ஐ** என்னால் கைப்பற்றப்பட்டது. அந்த அலுவலகத்திலிருந்த திரு.எம்.பார்த்தீபன் என்பவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபோது அவருடைய சட்டை மேல்பாக்கெட்டில் ரூ.5160/– வைத்திருந்தார். அதற்குண்டான விளக்கத்தை அவரிடம் நான் கேட்டபோது முன்னுக்குபின் முரணாக விளக்கம் அளித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாதாலும் அவர் ஏற்கனவே தான் இடைதரகராக இருப்பதாக தெரிவித்தாலும், தொடர் விசாரணைக்காக அந்த பணம் **ரூ.5160/–ஐ** என்னால் கைப்பற்றப்பட்டது. அந்த அலுவலகத்திலிருந்த திரு.எஸ்.வேலு என்பவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபோது அவருடைய சட்டை மேல் பாக்கெட்டில் ரூ.28,100/– வைத்திருந்தார். அதற்குண்டான விளக்கத்தை கேட்டபோது, தன்னுடைய மாமன்கள் மாதேஷ் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்கள் 11.12.2017ந்தேதியில் ஆவண எழுத்தர் திரு.சின்னதுரை மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய தயார் செய்யப்பட்ட ஆவணங்களுக்குண்டான இடத்தை சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்கள் 16.12.2017ந்தேதி களஆய்வு செய்ய வரசொன்னதின்பேரில் பணம் ரூ.28,100/–ஐ பத்திர எழுத்தர் சின்னதுரை தன்னிடம் கொடுத்து அனுப்பி சார்பதிவாளர் அவர்கள் களஆய்வு செய்தவுடன் அவருக்கு கொடுத்துவிட்டுவருமாறு சொன்னதாக தெரிவித்தார். இதுதொடர்பாக சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் சார்பதிவாளரிடம் கேட்க 11.12.2017ந்தேதியன்று அலுவலகத்தில் திரு.மாதேஷ் மற்றும் திரு.சுப்பிரமணி பெயரில் பதிவு

செய்ய தயார் செய்யப்பட்ட ஆவணங்களின் ஒளிநகல்களை எடுத்து ஆஜர் செய்து கள ஆய்வு மேற்கொண்ட பிறகு தான், ஆவணத்தை திரும்ப வழங்க முடியும். அதனால் அதை நிலுவையில் வைத்திருப்பதாக சொன்னார். அதனால் அந்த ஆவணங்களின் ஒளிநகல்கள் இரண்டையும் என்னால் தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த ஆவணங்களின் விவரங்கள் பின்வருமாறு

1. 11.12.2017ந்தேதியில் தருமபுரி மாவட்டம், வெள்ளோலை கிராமம், திரு.பெரியண்ணன் மகன் திரு.மாதேஷ் அவர்களுக்கு வெள்ளோலை கிராமம் ஜடையன் மக்கள் பெரியண்ணன், முருகேசன், கோவிந்தம்மாள் மற்றும் சாமிகன்னு ஆகியோர் வெள்ளோலை கிராம நத்தம் சர்வே எண்.11/1 –ல் கண்ட காலிமனை மற்றும் ஓட்டுவில்லை வீட்டை விற்பனை செய்ததற்கான ஆவண பத்திரத்தின் ஒளிநகல் மற்றும் இணைப்புகள் (13 தாள்கள்).

2. 11.12.2017ந்தேதியில் தருமபுரி வட்டம், சோலைக்கொட்டாய் அஞ்சல், கெங்கான்கொட்டாய் கிராமம் சின்னசாமி மகன் சுப்பிரமணி அவர்களுக்கு மேற்படி கிராமத்தை சேர்ந்த சின்னசாமி மகன் முனியப்பன் அவர்கள் நாயக்கனஅள்ளி கிராம சர்வே எண்.872/10–சி –யில் கண்ட விவசாய நிலத்தை விற்பனை செய்ததற்கான கிரய பத்திரத்தின் ஒளிநகல் மற்றும் இணைப்புகள் ( 17 தாள்கள்) .

திரு.எஸ்.வேலு அவர்கள் சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக ரூ.**28,100/–** ஐ வைத்திருந்ததால் அந்த பணத்தை தொடர் விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. பின்பு அருகிலிருந்த ஆவண எழுத்தர் என்று சொன்ன திரு.எம்.தம்பிதுரை அவர்களை சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக பணத்தை வைத்திருந்தார். அரசு சாட்சிகள் உதவியுடன் அந்த பணத்தை எண்ணி பார்க்கையில் ரூ.1,01,730/– இருந்தது. அந்த பணத்திற்குண்டான விளக்கத்தை கேட்டபோது, சங்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த தியாகு என்பவரின் பத்திரபதிவு 13.12.2017ந்தேதி செய்தற்காக மாரிசாமி என்பவர் பத்திரபதிவு செலவிற்காக ரூ.14,000/– கொடுத்திருந்தாகவும் மற்றும் சென்னை, அயனாவரம், பனந்தோப்பு, ரயில்வேகாலனி, கதவு எண் 394 H முகவரியைச் சேர்ந்த கோவிந்தராஜிலு என்பவரின் பத்திரபதிவு 13.12.2017ந்தேதி செய்தற்காக பாலசுந்தர்

என்பவர் 16.12.2017ந்தேதி காலை ரூ.5000/– கொடுத்திருந்தாகவும், மீதி பணம் ரூ.82,730/– ஏற்கனவே தன் மூலம் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களுக்குண்டான கையூட்டு தொகையாக சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்தாகவும் தெரிவித்தார். அவருடைய விளக்கத்தை சரிபார்க்கும் பொருட்டு திரு.தியாகு மற்றும் திரு.பாலசந்தர் அவர்களை தொடர்பு கொண்டு பேசியபோது மேற்சொன்னவாறு அவர்கள் இருவரும் தம்பிதுரையிடம் பணம் கொடுத்தாக உறுதி செய்தனர். ஆகவே அந்த பணம் ரூ.14,000/– மற்றும் ரூ.5000/– ஆக மொத்தம் ரூ.19,000/– அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் என்னால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்கு அவர் வைத்திருந்த பணம் ரூ.82,730/–ஐ என்னால் தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு நான் சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களிடம் 13.12.2017ந்தேதியில் திரு.தியாகு மற்றும் திரு.கோவிந்தராஜிலு பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் பற்றி கேட்க, அவர் கீழ்க்கண்ட பத்திரங்களின் ஒளி நகல்களை எடுத்து ஆஜர் செய்தார்.

1. 13.12.2017ந்தேதி சென்னை, அயனாவரம், பனந்தோப்பு ரயில்வே காலணி 5வது தெரு, கதவு எண் 394 H முகவரியில் வசிக்கும் சித்தையா மகன் T.S.கோவிந்தராஜிலு என்பவருக்கு தருமபுரி வட்டம், பாப்பிநாயக்கனஅள்ளி, சோகத்தூர் அஞ்சல், மேட்டுத்தெரு கொல்லக்கொட்டாய், கதவு எண் 2/229 முகவரியில் வசிக்கும் முனியப்பனின் மகளும் சக்கரவேல் அவர்களின் மனைவியுமான லஷ்மி என்பவர் எழுதி கொடுத்த பாப்பிநாயக்கனஅள்ளி சர்வே எண் 541/2D உள்ள காலிமனை மற்றும் மங்களூர் ஓட்டு வீட்டை விற்பனை செய்ததற்கான ஆவண பத்திரத்தின் ஒளிநகல் மற்றும் இணைப்புகள் (10 தாள்கள்)
2. 13.12.2017ந்தேதி தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், செல்லியம்பட்டி மஜரா புலிக்கரை அஞ்சல், சங்கம்பட்டி கிராமம் வசிக்கும் மாது அவர்களின் குமாரர் தியாகு என்பவருக்கு தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், செல்லியம்பட்டி, புலிக்கரை அஞ்சல், சங்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த (லேட்) பெருமாள் அவர்களின் மகன்கள் மாது மற்றும் ராமன் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த

செல்லியம்பட்டி கிராம பட்டா எண் 857 சர்வே நெ.300/5 விவசாய நிலம் விற்பனை செய்ததற்கான ஆவண பத்திரத்தின் ஒளிநகல் மற்றும் இணைப்புகள் (7 தாள்கள்)

மேற்கண்ட இரண்டு ஆவணங்களின் ஒளிநகல்களை என்னால் தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு அலுவலகத்தில் பணிபுரிந்த நிர்மலா என்பவரை முதல்நிலை காவலர் 3556 திருமதி.கோ.ரம்யா என்பவர் மூலம் சோதனை செய்யப்பட்டதில் அவர் வைத்திருந்த கருப்புநிற கைப்பையில் ரூ.50/– வைத்திருந்தார். அதற்குரிய விளக்கம் கேட்டதற்கு வீட்டிலிருந்து செலவிற்காக எடுத்து வந்ததாக கூறியதால், அவர் கூறிய விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு அலுவலகத்தில் பணிபுரிந்த புனிதா என்பவரை முதல்நிலை காவலர் 3556 திருமதி.கோ.ரம்யா என்பவர் மூலம் சோதனை செய்யப்பட்டதில் அவர் வைத்திருந்த கருப்புநிற கைப்பையில் ரூ.60/– வைத்திருந்தார். அதற்குரிய விளக்கம் கேட்டதற்கு வீட்டிலிருந்து செலவிற்காக எடுத்து வந்ததாக கூறியதால், அவர் கூறிய விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு அலுவலகத்தில் பணிபுரிந்த ராதா என்பவரை முதல்நிலை காவலர் 3556 திருமதி.கோ.ரம்யா என்பவர் மூலம் சோதனை செய்யப்பட்டதில் அவரிடம் பணம் எதுவுமில்லை. பிறகு அலுவலகத்தில் பணிபுரிந்த அழகேசன் என்பவரை சோதனை செய்யப்பட்டதில் அவரிடம் பணம் ரூ.20/– வைத்திருந்தார். அதற்குரிய விளக்கம் கேட்டதற்கு வீட்டிலிருந்து செலவிற்காக எடுத்து வந்ததாக கூறியதால், அவர் கூறிய விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது கீழ்கண்ட ஆவணங்கள் பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக சம்மந்தப்பட்ட பக்கங்களில் நான் மற்றும் அரசு சாட்சிகள் கையொப்பங்கள் செய்து அதன் ஒளி நகல் எடுக்கப்பட்டு தொடர் விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது சார்பதிவாளரிடம் இருந்து பெறப்பட்ட கீழ்க்கண்ட அலுவலக ஆவணங்களை நான் பார்வையிட்டேன். “அ” பதிவேடு பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டில் பக்கம் எண் 63ல் 15.12.2017ந்தேதியில் கடைசியாக பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3077 குறித்த விபரங்கள் உள்ளது. “D” கணக்கின் கீழ் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட விவரங்கள்

பார்வையிடப்பட்டது. 15.12.2017ந்தேதி வரையில் மொத்தம் ரூ.18549/– வசூல் செய்யப்பட்டதாக பதிவுகள் உள்ளது. அதில் இணையதளம் மூலமாக செலுத்தப்பட்ட தொகை ரூ.5583/– போக மீதி ரூ.12966/– நிலுவையில் உள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரிவு 41 கட்டணப்பதிவேடு பார்வையிடப்பட்டது. அதில் பக்கம் 68ன்படி 15.12.2017ல் மொத்தம் ரூ.4700/– வசூல் செய்யப்பட்டதாக பதிவுகள் உள்ளது. இணையதளத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உட்பிரிவு கட்டண பதிவேடு பார்வையிடப்பட்டது. அதில் 15.12.2017ந்தேதி மொத்தம் ரூ.960 வசூல் செய்யப்பட்டதாக பதிவுகள் உள்ளது. அதில் இணையதளம் மூலம் செலுத்தப்பட்ட தொகை ரூ.960/– போக மீதியுள்ள தொகை ரூ.40/– கையிருப்பாக உள்ளதாக பதிவுகள் உள்ளது. இணைதளத்தில் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு கட்டணத்திற்கான பதிவேடு பார்வையிடப்பட்டது. 15.12.2017ல் மொத்தம் ரூ.600/– இணையதளம் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது. கையிருப்பு ஏதுமில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது. "G" கணக்கு பதிவேடு பார்வையிடப்பட்டது. 15.12.2017ந்தேதியில் 12 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 19 ஆவணங்கள் திருப்பப்பட்டதாகவும், 201 ஆவணங்கள் திருப்பி வழங்கப்படவுள்ளதாகவும், 1 ஆவணம் நிலுவையில் உள்ளதாகவும், 7 நகல்கள் வழங்கப்பட்டதாகவும், 42 வில்லங்க சான்று வழங்கப்பட்டுள்ளதாகவும் பதிவுகள் உள்ளது. "H" கணக்கு பதிவேடு பார்வையிடப்பட்டது. 15.12.2017ந்தேதியில், "அ" கணக்கின் கீழ இணையதளம் மூலமாக ரூ.95830/–ம் பணமாக ரூ.730/–ம், "D" கணக்கில் இணையதளம் மூலம் ரூ.5583/–ம் பணமாக ரூ.12966/–ம் உட்பிரிவு கட்டணமாக ரூ.40/–ம், நிரந்தா முன்பணம் ரூ.100/–ம் ஆக மொத்தம் ரூ.13836/– பணமாக கையிருப்பில் உள்ளதாக பதிவுகள் உள்ளது. டிசம்பர் 2017 மாதத்திற்குறிய பணியாளர்களின் வருகைப்பதிவேடு பார்வையிடப்பட்டது. தன்பதிவேடு பார்வையிடப்பட்டது. அதில் கடைசி பதிவு நடப்பு எண்.352, 14.12.2017ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பணியாளர்களின் சொந்தப்பணம் குறித்த பதிவேடு பார்வையிடப்பட்டது. கடைசியான பதிவு பக்கம் 32ல் 15.12.2017 ந்தேதியில் உள்ளது. மேற்கண்ட ஆவணங்களை பார்வையிட்டதற்கு அடையாளமாக நான் மற்றும் அரசு சாட்சிகள் சம்மந்தபட்ட பக்கங்களில் கையொப்பம் செய்தோம். பிறகு மேற்கண்ட ஆவணங்களின் ஒளிநகல் எடுக்கப்பட்டு தொடர் விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கையின் முடிவில் சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ்

அவர்களால் திருப்திகரமான விளக்கம் தரஇயலவில்லை. எனவே ஏற்கனவே எனக்கு கிடைத்த தகவல்படி அந்த தொகைகள் பத்திர பதிவு ஆவண எழுத்தர்களிடமிருந்தோ, இடைதரகர்களிடமிருந்தோ சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்கள் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து கையூட்டாக பெற்றிருக்கக்கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதால் இன்று 17.12.2017ந்தேதி மதியம் 11.00 மணிக்கு எதிரிகள் திரு.அ.அல்லா பகஷ், சார்பதிவாளர் மீது தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2017, பிரிவு 102 Cr.PC and 13(2)r/w 13(1)(d) of the Prevention of Corruption Act, 1988 r/w 109 IPC – படியும், எதிரிகள் 1) திரு.D.வெங்கடேசன், 2) திரு.M.பார்த்தீபன் 3) திரு.S.வேலு 4) திரு.M.தம்பிதுரை ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணத்திற்கு அவர்களால் திருப்திகரமான விளக்கம் தரஇயலவில்லை. எனவே அவர்கள் பத்திரபதிவுதாரர்களிடமிருந்து பணத்தை பெற்று சார்பதிவாளர் திரு.அ.அல்லா பகஷ் அவர்களுக்கு கையூட்டு கொடுத்து பணியை முடித்து கொடுக்க வைத்திருக்ககூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதால் அவர்கள் மீது பிரிவு 102 Cr.PC, 12 and 13(2)r/w 13(1)(d) of the Prevention of Corruption Act, 1988 r/w 109 IPC – படியும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தருமபுரி மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இவ்வழக்கில் புலன் விசாரணையை மேற்கொள்ள தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.கே.மஞ்களா அவர்களுக்கு பணிக்கப்பட்டது.

S.Subramani 17/12/2017

S.சுப்பிரமணியன்,
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
தருமபுரி.